1971 டிசம்பர் 14]

கிண்டியில் பாம்புகள் பூங்கா

* 389 வினா—திரு. பெ. மலேச்சாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் பாம்புப் பூங்கா அமைப்பதற்கு அரசு நிலம் வாங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

அரசுப்பேருந்துகளில் முடவர்களுக்கு இலவசப் பயணம்

* 390 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர அரசுப் பேருந்துகளில் நடக்க முடியாத முடவர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முடவர் ஒருவர் தமது உடல் ஊனத்திற்கான சிகிச்சை பெறுங்காலத்து சென்னை மாநகரில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம். ஆனால், அவர், அவரது உறுப்பு இழப்பு அல்லது ஊனம் குறித்து அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் வாதத்தினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து சர்ஜன் ஒருவரிடமிருந்து சான்றிதழ் ஒன்றையும் அவர் சிகிச்சை பெற்று வருகிறார் என்று குறிப்பிடும் மருத்துவ மனைச் சீட்டு ஒன்றையும் அல்லது மருத்துவரின் சான்றிதழ் ஒன்றையும் காண்பிக்க வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, முடவர்கள், கண் தெரியாதவர்கள் ஆகியோர் சிகிச்சைக்குப் போகும்போது பஸ்களில் இவர்களுக்கென்று சில இடங்களை ஒதுக்கி வைக்க அரசு முன்வருமா ?

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்தகையவர்களுக்கு பொதுமக்களே மனிதாபிமானத்தோடு இடம் அளிப்பார்கள் என்பதனால் இதற்காக தனிப்பேருந்து நிலைகள் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இத்தகையவர்கள் மருத்துவர்களிடம் இருந்து சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும் என்றார்களே, முடவர்கள்,

குருடர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக பஸ்களில் பிரயாணம் செய்ய தனி பாசே அரசு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த வசதி சிகிச்சை காலத்தில் மட்டும் அளிக்கிற நிலை இருப்பதால் அதுபோன்று சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன.

சில பேருந்துகளில் இரண்டு நடத்துநர்கள்

*** 391 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அதிக நெரிசல் உள்ள சில ரூட்களில் ஓடும் பேருந்துகளில், இரண்டு கண்டக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ?

(இ) ஆம் எனில், இம்முறையை மேலும் பல பஸ் ரூட்களுக்கு விரிவு படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சோதனை நடவடிக்கையாக, 4-ஆம் எண் பேருந்து வழித்தடத்தில் செல்லும் (மந்தவெளி-தண்டையார்பேட்டை) ஒவ்வொரு பேருந்திலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் 25—6—1971-ஆம் நாளிலிருந்து, இரண்டு நடத்துநர்கள் நியமிக்கப்பட்டனர். இது பலனளிக்கத் தக்க வகையில் இல்லாததால், 4—11—1971-ஆம் நாளிலிருந்து இச் சோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

(இ) இனிமேல், பேருந்து ஒன்றில், இரண்டு நடத்துநர்களை நியமிக்கும் உத்தேசமில்லை.

திரு. என் கிட்டப்பா : மகளிர்களுக்கு மட்டும் என்று ஓடுகிற பஸ்களில் பெண் கண்டெக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதேமாதிரி இன்னமும் 2 கண்டெக்டர்கள் டி.வி.எஸ். பஸ்ஸில் இருந்து வருகிறார்கள். ஆனால் இங்கே 25—6—1971-இல் ஆரம்பிக்கப்பட்டு பலன் அளிக்க வில்லை என்ற காரணத்தினால் கைவிடப்பட்டதாகச் சொல்கிறாரே, மீண்டும் ஒரு முறை பரிசீலித்து பஸ்கள் வேகமாகப் போவதற்காக 4-ஆம் நம்பர் பஸ்களிலாவது இரண்டு கண்டெக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு கண்டெக்டர்களைப் போட்டால் பஸ் வேகமாகப் போகக்கூடும், டிக்கெட்டு கொடுக்க வசதியாக இருக்கும் என்று கருதித்தான் போடப்பட்டது. ஆனால் அவர்களுக்குள் எதுவரை தாங்கள் டிக்கெட்